**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-239/2019**
**Dated :23.03.2026**
**Deposition of witness for : P.W.1**

**Recall PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருணாநிதி | வயது | : | 48 |
| தந்தை பெயர் | : | **ரெங்கன்** | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | பிசானத்தூர் | தொழில் | : | **விவசாயம்** |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused absent. Counsel present.**
**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரிகள் ஆஜர்.)

**BNSS. பிரிவு 348–ன் கீழ் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.ப.மனு எண். 116/2026 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 25.09.2011 ஆம் தேதி நானும் மற்ற நபர்களும் சேர்ந்து, கந்தர்வகோட்டை ஐயப்பா மர அறுவை மில்லில் கிருஷ்ணமூர்த்தி என்பவரை, கொலை முயற்சி செய்ததாக என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது பொய் வழக்கு ஆகும். கடந்த 10.11.2012 ஆம் தேதி நானும் மற்ற நபர்களும் சேர்ந்து, கறம்பக்குடி ரஜினிகாந்த் என்பவரை தாக்கியதாக என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அது பொய் வழக்கு ஆகும். நான் கொடுத்த வழக்கிற்கு எதிர் வழக்காக பதிவு செய்யப்பட்டது. கறம்பக்குடி காவல் நிலையத்தில், பொறுப்பு அதிகாரியாக இருந்த, கலியபெருமாள் என்ற காவல் உதவி ஆய்வாளரை எதிரிகளை விடுவிக்கச் சொல்லி அவரை பணி செய்யவிடாமல் தடுத்து எதிரிகளை வெளியேற்றினேன் என்று என்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதில் எனக்கு தண்டனை விதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கை வாபஸ் பெறுவதற்காக அந்த வழக்கு என்மீது போடப்பட்டது. 2004 காலக்கட்டத்தில் நான் பகுஜன் சமாஜ் கட்சியில் மாவட்டச் செயலாளராக இருந்தேன் என்றால் சரிதான்.

2) நான் சொல்வது போல, வழக்கு பதிவு செய்யவேண்டும் என்றும் நான் சொல்வது போல் சட்டப்பிரிவுகள் பதிவு செய்ய வேண்டும் என்றும் அனைத்து காவல் நிலைய அதிகாரிகளையும் மிரட்டுவேன் என்றும் அதற்கு மறுக்கும் அதிகாரிகள் மீது கட்சியின் சார்பில் பொதுகூட்டம் ஏற்பாடு செய்து விமர்சிப்பேன் என்றால் சரியல்ல. பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தாக என் மீது குண்டர்கள் தடுப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். பொய்யாக போடப்பட்டதால், குண்டர் தடுப்பு சட்டம் விலக்கப்பட்டது. எனது அக்கா கணவர் மதியழகன் கொடுத்த புகாரில் சாதாரண பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்பதுதான் இவ்வழக்கில் எனது குற்றச்சாட்டு என்றால் சரிதான். சம்மந்தம் இல்லாத என்மீதும் எனது சகோதரர்கள் மீதும் வழக்கு

போட்டுவிட்டார்கள். என்மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு தவறான பொருண்மையின் அடிப்படையில் பதியப்பட்ட வழக்கு என முடிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

3) மதியழகன் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கில் கண்ட எதிரிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எதிரிகளை நான் சொல்வது போல வழக்கு பதிவு செய்ய மிரட்டினேன் என்றாலும் அவர்கள் கேட்கவில்லை என்பதால், பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது புகாரில் பட்டியலிடப்பட்டுள்ள 1 முதல் 6 ஆவணங்கள் கு.ப.ம.எண் 519/2005 இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள குறிப்பில் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. அது பற்றி எனக்கு தெரியும் என்றாலும் தெரியவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் என்னிடம் இல்லாததால் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். முதன் முதலாக 03.05.2005 ஆம் தேதியில் தான் இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக எதிரிகளுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் புகார் மனு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக உயர் அதிகாரிகளுக்கு புகார் அனுப்பியும் நடவடிக்கை எடுக்கவில்லை.

4) அவ்வாறு நான் கொடுத்ததாக சொல்லும் புகார் மனுவின் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். அவ்வாறு புகார் மனுவின் நகல்கள் எதுவும் என்னிடம் இல்லையென்றாலும், இதற்கு பின்னிட்டு தான் தயார் செய்யப்படும் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல 19.04.2005 ஆம் தேதியில் எதிரிகள் என்னிடம் பணம் கேட்கவில்லையென்றாலும் வழக்கு போடுவதாக மிரட்டவில்லையென்றாலும் எதிரிகளை பழிவாங்குவதற்காக அவர்கள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளின் மீதான எனது புகாரின் பெயரில் கந்தர்வகோட்டை காவல் ஆய்வாளர், விசாரணை செய்து உயர் அதிகாரிகளிடமும் நீதிமன்றத்திலும் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. காவல் ஆய்வாளர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் தான் தனி புகார் தாக்கல் செய்துள்ளேன்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.23 12:39:36 +0530

**நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**